செ.வெ.எண்: 10

## செய்தி வெளியீடு--7.1.2009

## ஆளுநர் மாளிகையில் பிரதமர் அவர்களுடன் முதலமைச்சர் சந்திப்பு

## வெள்ள நிவாரணம் முதலிய பணிகளுக்கு உடனடியாக உதவிகள் வழங்கிட முதலமைச்சர் கலைஞர் கோரிக்கை

சென்னை துறைமுகத்திலிருந்து மதுரவாயல் சந்திப்பு வரை 1600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ள உயர்மட்ட மேம்பாலச் சாலை அடிக்கல் நாட்டுதல் மற்றும் வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினம் முதலிய நிகழ்ச்சிகளில் பங்குபெறுவதற்காக இன்று இரவு சென்னை வந்துள்ள பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களை ஆளுநர் மாளிகையில் சந்தித்து பின்வரும் திட்டங்களுக்கு உடனடியாக நிதியுதவி வழங்குமாறு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கடந்த நவம்பர் மாதத்தில் சென்னை உட்பட தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் வரலாறு காணாத அளவில் பெய்த பெருமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் நிவாரண உதவிகள் வழங்குவதற்காகத் தமிழக அரசு இதுவரை 950 கோடி ரூபாய் வெள்ள நிவாரணமாக வழங்கியுள்ளது. மத்திய அரசு ஏற்கனவே 200 கோடி ரூபாய் முன்பணமாக வழங்குமென அறிவித்து; வெள்ளச் சேதத்தை பார்வையிடும் மத்திய குழுவின் அறிக்கை கிடைத்தபின் தேசிய பேரிடர் மற்றும் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து நிவாரண நிதி வழங்குவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. மத்திய குழு பார்வையிட்டு அறிக்கை அளித்த பிறகும், இதுவரை மத்திய நிதியுதவி கிடைக்காததால் மாநில அரசுக்கு ஏற்பட்டுவரும் சிரமத்தைக் கருதி தேசிய இயற்கை பேரிடர் மற்றும் எதிர்பாரா செலவின நிதியிலிருந்து ஆயிரம் கோடி ரூபாய் உடனடியாக விடுவிக்குமாறு முதலமைச்சர் கலைஞர் கேட்டுக்கொண்டார்.

மதிப்புக் கூட்டு வரி தமிழகத்தில் 1.1.2007 முதல் நடைமுறைப்படுத்தியதால், தமிழக அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடுகட்டும் வகையில் மத்திய அரசு

மாநில அரசுக்கு இழப்பீடு 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளிக்கப்பட வேண்டியுள்ளது.

மத்திய விற்பனை வரியிலிருந்து மேலும் 1000 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட வேண்டியுள்ளது;

எனவே தமிழகத்திற்கு உடனடியாக 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் விடுவிப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும்;

2006 இல் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு விவசாயிகளுக்கு ஏறத்தாழ ஏழாயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தது. அதன்காரணமாக மாநில அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்யும் வகையில் 3 ஆயிரத்து 27 கோடியே 80 இலட்சம் ரூபாயும், மத்திய அரசின் விவசாயிகளுக்கான கடன்தள்ளுபடித் திட்டத்தின்கீழ் மேலும் 159 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 3 ஆயிரத்து 187 கோடியே 40 இலட்சம் ரூபாய் தமிழக அரசுக்கு அனுமதிக்குமாறும்;

தமிழகத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் ஒருபிரிவினராக உள்ள அருந்ததியர் சமுதாயத்திற்கு தனி இட ஒதுக்கீடு வழங்கிட இந்திய அரசியலமைப்பின்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கான தேசிய ஆணையத்திடம் ஒப்புதல் கோரி அதன் தலைவர் டாக்டர் பூட்டாசிங் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தமிழக அரசின் இந்தக் கோரிக்கைக்கு ஒப்புதல் வழங்க ஆவன செய்யுமாறும் பிரதமர் அவர்களை முதலமைச்சர் கலைஞர் கேட்டுக் கொண்டார்.

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவையின் ஒப்புதலை விரைவில் வழங்கிடுமாறும் முதலமைச்சர் பிரதமரிடம் கேட்டுக் கொண்டார்.

***

வெளியீடு; இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை